## தேசிய வனவிலங்குப் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2015

வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் தேசிய வனவிலங்குப் பூங்கா அதிகாரச்சட்டத்தின் 8(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும்மென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனவிலங்கு பூங்கா அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணம் ஆகியவற்றைக் தேய்மானத்திற்குள்ளாக்கும்போது அந்த ஒவ்வொரு சொத்தினதும் பயன்படு ஆயட்காலம் கருத்திற் கொள்ளப்படாது. ஒட்டு மொத்தப் பெறுமதியின் அடிப்படையில் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டினது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கண்காட்சிக்கான விலங்குகளது தற்போதைய பெறுமதி ரூபா 980,835,650 ஆகக் காட்டப்பட்ட போதும், அப் பெறுமதி எதனடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது எனும் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது முறையே வனவிலங்குப் பூங்கா மற்றும் ரிதீயகம சவாரிப் பூங்கா என்பவற்றினது நூலகங்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 59,551 மற்றும் ரூபா 36,327 பெறுமதியான புத்தகங்கள், சொத்துக்களாகக் கணக்கிலிடப்படாது நானாவித செலவினத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி விலங்கின உணவுக் கையிருப்பு கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு பயன்படுத்தப்படக் கூடியவாறு செய்யப்பட்டதும் நிதியத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதுமான ரூபா 490,282,904 கூட்டுத் தொகையுடைய சொத்துக்கள் மூலதனப்படுத்துவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையாகக் காட்டப்பட்டதால் அவற்றின் மீதான தேய்மானம் கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) சவாரி மற்றும் வனவிலங்குப் பூங்கா நிதியத்திற்கென வனவிலங்குப் பூங்காத் திணைக்களம் செலவழித்த ரூபா 10,301,650 நிதியத்திற்கு உரித்தாக்கப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படடாத கொடுப்பனவாகிய ரூபா 72,196,556 மற்றும் இனங்காணப்படாத பெறுவனவாகிய 360,590 என்பவற்றை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணங்கண்டு அவற்றைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சேர்ந்து நின்ற நானாவித செலவினம் ரூபா 1,424,798 ஆகவும் மற்றும் நிதியத்தின் பேரேட்டின் பிரகாரம் அது ரூபா 1,830,882 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 406,084 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 06 நிர்மாண வேலைகளது நடைபெறும் வேலைப் பெறுமதி ரூபா 135,737,022 ஆகும். அவற்றினோடு தொடர்புடைய உப பதிவேடுகளின் பிரகாரம் அது ரூபா 93,176,728 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 42,560,294 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டினது திறைசேரி வைப்பு ஆரம்ப மீதி மற்றும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி மீதிகள் முறையே ரூபா 1,432,763,200 மற்றும் ரூபா 1,842,490,560 ஆகும். நிதியத்தின் ஐந்தொகையின் பிரகாரம் ஆரம்ப மீதி மற்றும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி மீதி முறையே ரூபா 1,431,478,742 மற்றும் ரூபா 1,849,298,100 ஆகியமையால் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகள் முறையே ரூபா 1,284,458 மற்றும் ரூபா 6,807,540 ஆகும்.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
| --- | --- | --- |
| | ரூபா | |
| வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் | 4,833,084,966 | பொதுப் பேரேட்டுக் கணக்கும் நாட்குறிப்புப் பதிவுகளும் |
| முடிவடையாத வேலைகள் | 1,290,924,857 | விரிவான ஒப்பந்தக் கொடுப்பனவுப் பதிவேடு |
| கடன் கொடுத்தோர் | 340,982 | விரிவான பதிவேடு அல்லது பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் |
| கண்காட்சிக்கான விலங்குகள் | 980,835,630 | தற்போதைய விலங்கினப் பெறுமதி உள்ளடங்கிய நிலையான சொத்துப் பதிவேடு |
| ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 217,513,175 | நிலையான சொத்துப் பதிவேடு |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் | 484,280 | நாட்குறிப்புப் பதிவுகள் |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய விலங்கினப் பூங்கா அதிகாரச்சட்டம். | |
| பிரிவு 8(3)(ஆ) | வனவிலங்குத் திணைக்களத்தில் பணி புரியும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப்படியாக ரூபா 22,134,258, வெளிநாட்டுப் பயிற்சிக்கு ரூபா 3,522,050, உள்நாட்டுப் பயிற்சிக்கு ரூபா 10,000 மற்றும் ஊழியர் நலன்புரிச் செலவுக்கு ரூபா 451,040 என நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்டிருந்தன. |
| பிரிவு 9(1) | வனவிலங்குப் பூங்கா சம்பந்தமான சகல காரணங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அமைச்சருக்குப் |

| | | |
|---|---|---|
| | | பரிந்துரைத்தல் பணிகளுக்காக தலைவர் எனும் ரீதியில் பணிப்பாளரையும் ஏனைய 11 நபர்களையும் உள்ளடக்கிய தொழிற்படு ஆலோசனைக் குழு ஒன்று அமைச்சரால் நியமிக்கப்படலாம். அவ்வாறாக ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| | பிரிவு 9(2) | தொழிற்படு ஆலோசனைக் குழுவானது குறைந்தது ஆண்டில் இரு முறை கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், அவ்வாறாகக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| | பிரிவு 14 | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய வனவிலங்குப் பூங்கா எனும் அர்த்தத்திற்கு ஒவ்வாத வாகொல்ல விலங்கினப் பூங்கா, ஹம்பாந்தோட்டை ரிதீயகம சவாரிப் பூங்கா மற்றும் கஹபொல சுற்றாடல் பூங்கா தொடர்பான சட்டபூர்வ ஏற்பாடுகள் இல்லாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 2,541,875,764 செலவழிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | 2013 சனவரி முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 3,214,302 பெறுமதியான மாமிச உணவு பொருட் கொள்வனவு நடைமுறைக்கிசையாதவாறு வேலை நிமித்த முற்பண அடிப்படையில் திறந்த சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இம் முற்பணம் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் | வனவிலங்குப் பூங்காத் திணைக்களத்தின் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய பெறுமதி சேர் வரியாகிய ரூபா 33,103,307 வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 631,057,480 மிகை ஆனதுடன் அதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 550,500,998 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 80,556,482 அதிகரிப்பு தென்பட்டது. தெஹிவளை வனவிலங்குப் பூங்கா மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் என்பவற்றினது வருமானம் முறையே ரூபா 86,539,782 மற்றும் ரூபா 5,256,614 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்புக்கு பிரதானமான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2011 ஆம் ஆண்டில் ரூபா 373,338,295 ஆகவிருந்த மிகை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 631,057,480 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் மற்றும் வரிக் கொடுப்பனவு ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 420,557,041 ஆகவிருந்த பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 692,779,039 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய விலங்கினப்பூங்கா அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நோக்கங்கள் பின்வருமாறு.

(i) நலன்புரி நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்த்தல்.

(ii) தெஹிவளை வனவிலங்குப் பூங்காவைப் கண்டுகளிக்க வருபவர்களுக்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான விசேட இடத்தை வழங்குதல்

(iii) வனவிலங்குப் பூங்காவில் சேவை புரிபவர்களுக்கு நலன்புரி மற்றும் ஊக்குவிப்புப் படித்திட்டத்தைத் தயாரித்தல்

(iv) வனவிலங்குப் பூங்கா சம்பந்தமான சகல காரணங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அமைச்சருக்குப் பரிந்துரை வழங்குதல் தொடர்பாக அமைச்சரவையால் தொழிற்படு ஆலோசனைச் சபையை உருவாக்குதல்

(v) மேற்படி, தொழிற்படு ஆலோசனைச் சபைக் கூட்டமானது குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆண்டிலும் 2 தடவைகள் கூட்டங்களை நடாத்துதல்

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 45 செயற்திட்டங்களுக்கு ரூபா 565,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், ரூபா 246,420,391 மாத்திரமே, செலவிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட ரூபா 39 மில்லியன் பெறுமதி வாய்ந்த 08 செயற்திட்டங்கள் காலவரையின்றிப் பின்போடப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டினது திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டு காலப்பகுதிக்கும் கூடிய ரூபா 1,959,000 கேள்வி வைப்புகள் பொருத்தமாகத் தீர்த்து வைக்கப்படாது அல்லது வருமானத்திலிடப்படாது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) ஒவ்வொரு விலங்கினப் பூங்காவிற்கும் வெவ்வேறாக வருமானக் கூற்றைத் தயாரிக்காமையால் அந்தந்த விலங்கினப் பூங்காக்களது உள்ளவாறான இலாபத் தகவு அல்லது நட்டம் அவதானிக்கப்பட முடியாதிருந்தது.

(இ) நிதியத்தால் வழங்குனர்களிடமிருந்தும் ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 44,828,258 தொகை தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தாவரவியல் பூங்கா மற்றும் பொது வினோத நடவடிக்கை அமைச்சிற்குரிய 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய அபம/13/1038/562/006 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பின்னவல விலங்கினப் பூங்காவை நிர்மாணிப்பதற்குரிய மதியுரை ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 10,976,195 கொடுப்பனவு செய்யப்படலாகாது எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கையில், அதற்கு மாறாக, 2015 ஆம் ஆண்டில் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் தவறான செய்தி சமர்ப்பிக்கப்பட்டு அதன் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டு குறித்த தொகை தொடர்புடைய கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 சனவரி 28 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பொருட் கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கைப் பிரகாரம், ஹம்பாந்தோட்டை சவாரிப் பூங்காவை நிர்மாணிப்பதற்கு ரூபா 157,570,248 கிரய மதிப்பீட்டில் மத்திய பொறியியல் பணிகள் தொடர்பான மதியுரைப் பணியகம் இந்த ஒப்பந்தத்திற்கு நிதியத்திடம் அங்கீகாரம் பெறாது வேறு 03 நிறுவனங்களுக்கு வழங்கியிருந்தது. இந் நிர்மாண சேவையின் கொடுப்பனவை மேற்கொள்கையில் ரூபா 49,614,290 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.4 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானைகளது சானம் மற்றும் அழுக்கு, தூசி முதலியவற்றை அகற்றுவதற்கு 3 ½ கியூப் லொறி ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பொருட்டு ரூபா 3,685,696 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

**4.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை**

பின்னவல யானைகள் சரணாலயத்தின் நுழைவுப் பாதையை அமைப்பதற்கான கிறவல் மண்னை வழங்குவதன் பொருட்டு ரூபா 502,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கிறவல் மண்ணை வழங்குவதற்குப் பயன்படுத்திய வாகனங்களது இலக்கம் பஸ் வண்டிகளுக்கும் வேன்களுக்கும் உரித்தானவை என அவதானிக்கப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கென மனிதவள முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

2015 ஆம் ஆண்டின்போது வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று இருக்கவில்லை. அமைச்சினாலும் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 பொருட் கொள்வனவுத் திட்டம்**

2016 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்கான விரிவான திட்டத்துடன் குறைந்தது 03 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் அவ்வறிவுத்துரையைக் கடைப்பிடிக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 11 விடயங்களில் 54 முதல் 100 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதானது பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | (i) நிர்மாண வேலை முடிவடைந்த உடனேயே பெறுமதியை மூலதனமாக்கி தேய்மானம் மேற்கொள்ளப்படாமை<br>(ii) விலங்கினப்பூங்கா அபிவிருத்தி நலன்புரி நிதியத்திலிருந்தும் திணைக்களச் செலவினத் தலைப்பிலிருந்தும் ஒரே நிர்மாண செயற்திட்டத்திற்கு செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் மூலதனமாக்கும் போது சொத்தினது சரியான பெறுமதி நிரூபனமாகவில்லை. |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) பதிவேடுகளைப் பேணுதல் | சகல நிலையான சொத்துக்கள், ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுகள், கண்காட்சிக்கான விலங்குகளது விபரம் மற்றும் பெறுமதி உள்ளடங்கிய பதிவேடுகள் பேணப்படவில்லை. |
| (ஈ) கொள்வனவுகள் | விலங்குகளுக்கான மாமிசம் கொள்வனவு செய்யப்படும் போது முறையான விதி முறைகள் கடைப்பிடிக்கப்பட வில்லை. |
| (உ) விலங்குகளைப் பெறுமதியிடல் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் | விலங்குகளைப் பெறுமதியிடுகையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதி முறை கடைப்பிடிக்கப்பட்டிராததுடன், மரணமடைந்த விலங்குகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முறையான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. |